முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 01.09.2025 அ.வ.எண். 33/2013, வா.சா.2. சாந்தகுமாரி, க/பெ. சிங்காரவேல்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் தாக்கல் செய்த தாவா பிராது, பிரமாண வாக்குமூலம், ஆவணங்களில் என்ன சங்கதிகள் உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனார் வெங்கடாசல கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தாவா சொத்து வருவதற்கு முன்பு ஆதியில் ஒரு ராஜம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராஜம்மாளிடம் ராஜமாணிக்கம் வாடகைதாரராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராஜமாணிக்கத்திற்கு என்ன உரிமையில் இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து தாவா சொத்தில் இருந்தார்.

2) ராஜம்மாள் இருந்த போதே ராஜமாணிக்கம் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து தாவா சொத்தில் இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் நான் நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுக்க சென்ற போது அவர் ஆட்சேபணை செய்தார். மேற்படி ராஜமாணிக்கம் எப்போதிருந்து தாவா சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக இருந்து வந்தார் என்றால் 2003 ல் ஆண்டில் நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்த போது தான் எனக்கு தெரியவந்தது அவர் சுவாதீனத்தில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் 2 வது வரியில் மேற்படி பிரதிவாதி ராஜம்மாளிடம் தாவா சொத்துக்களை வாடகைக்கு பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை.

3) நான் நீதிமன்றம் மூலம் தாவா சொத்தை சுவாதீனம் எடுக்க சென்ற போது ராஜமாணிக்கம் தாவா சொத்தில் இருந்தார் என்றால் அப்பா தான் சென்றார்

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் 9 வது பாராவில் வெங்கடாசல கவுண்டரோ அவருக்குபின்னிட்டு அவரது வாரிசான நாங்களோ பிரதிவாதியின் வாடகை உரிமையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேயில்லை எனவும், பிரதிவாதியிடமிருந்து வாடகை எதுவும் கேட்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா சா ஆ 7 அறிவிப்பு தான் நான் அனுப்பிய அறிவிப்பு ஆகும்.

4) வா சா ஆ 7 ல் உடனடியாக 24.02.2004 தேதியில் இருந்து இன்றை தேதி வரை மாத வாடகை ரூ.750 வீதம் எனது கட்சிக்காரருக்கு செலுத்த வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். நான் வாடகைதாரர் என்று ஒப்புக்கொண்டு தான் வா சா ஆ 7 அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நஷ்ட ஈடு கேட்டு தான் அறிவிப்பை அனுப்பியுள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் 9 வது பாராவில் வாடகைதாரராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் வாடகை எதுவும் கேட்கவில்லை என்றும் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 7 அறிவிப்பில் உடனடியாக வாடகை பாக்கி செலுத்த வேண்டும் என்றும் அறிவிப்பு கிடைத்தவுடன் காலி செய்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5) வாடகை ரூ.750 ஐ எதை வைத்து கேட்டேன் என்றால் அறிவிப்பு அனுப்பிய தேதியில் எவ்வளவு ரூபாய் வாடகை நடைமுறையில் இருந்ததோ அதை வைத்து நாங்களே ரூ. 750 என்று முடிவு செய்து கேட்டோம். மேற்படி சங்கதியை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால்

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

சரிதான். ராஜம்மாளிடம் ராஜமாணிக்கம் தாவா சொத்தில் வாடகைக்கு முன் தொகையாக ரூ. 10,000 கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தாவாசொத்தை சுவாதீனம் எடுக்க சென்ற போது ராஜமாணிக்கம் வாடகைதாரர் என்ற முறையில் தடை செய்ததால் தான் காலி சுவாதீனம் செய்யமுடியாமல் Symbolic possession எடுத்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 106 ன்கீழ் சட்டப்படியான அறிவிப்பு அனுப்பாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ராஜமாணிக்கம் தடுத்ததை நீக்கி சுவாதீனத்தை ஒப்படைக்கும்படி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.